சென்னை
# கொங்கு
நண்பர்கள் மலர்

ஏர் 9 • உழவு 8 • திருவள்ளுவர் ஆண்டு 2055 • விலை ரூ.20/- • ஆகஸ்ட் 2024 (ஆடி - ஆவணி)


## மாவீரன் தீரன் சின்னமலை கவுண்டரின்
## 219ஆம் ஆண்டு
# வீரவணக்க நாள்




முதல் சுதந்திர போராட்ட மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளையொட்டி 03–08–2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், சென்னை மேயர், மற்றும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.கே.கே.ரமேஷ், பொருளாளர், துணைத்தலைவர், முன்னாள் செயலாளர், ஆகியோர்
சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நாள் அரசு விழாவாக ஈரோடு மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டது. சங்ககிரி முதல் ஓடாநிலை வரை பெருவாரியான சொந்தங்களும் நண்பர்களும் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

## முதல் சுதந்திரப்போராட்ட வீரர் மாவீரன்
# தீரன் சின்னமலை கவுண்டரின்
## 219ஆம் ஆண்டு நினைவுநாள் விழா

மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு ஆகஸ்ட் 3 (ஆடி 18) அன்று நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர், பொருளாளர், முன்னாள் செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், கொங்கு நண்பர்களும், சொந்தங்களும் திரளாகக் கலந்துகொண்டு அவரது திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தினர்.







ஏர் 9 • உழவு 08 • திருவள்ளுவர் ஆண்டு 2055
விலை ரூ.20/- • ஆகஸ்ட் 2024 (ஆடி - ஆவணி)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கே.கே.ரமேஷ் |
| துணைத்தலைவர்கள் | : | வீ.க.செல்வக்குமார் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |
| தணிக்கையாளர் | : | ஆர்.பாலசந்திரன் |

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| எம்.பொன்னுசாமி | சி.கொங்குவேள் |
| கே.சந்திரமோகன் | எஸ்.சீனிவாசன் |
| டத்தோ எஸ்.பிரகதீஷ்குமார் | விசா எம்.சண்முகம் |
| பி.வி.கல்யாணசுந்தரம் | டி.எஸ்.சந்திரசேகர் |
| டாக்டர் எஸ்.ராஜாமணி | எஸ்.ஜெகநாதன் |
| கே.ஜெகதீசன் | கே.நித்தியானந்தன் |
| ஆர்.சண்முகவேல் | ஆர்.கந்தகார்த்திக் |
| கே.கே.முருகன் | பி.பிரேம்குமார் |
| | சாந்தி சிவசண்முகம் |

**Published by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No:34 Srinivasa Perumal Sannathi 1st St,
Royapettah, Chennai 600014.

**Printed by** :
A.Sheik Dawood, Dawood Graphics,
No.63,Muthu Mudali St, Royapettah, Chennai-600 014.

**Editor K.K.Ramesh**



*மாவீரன் தீரன் சின்னமலை*

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலையங்கம்

கொங்குச் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்,

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குழந்தைகள் விழா மற்றும் விளையாட்டு விழா கடந்த ஜுலை மாதம் 21–07–2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை, நேரு ஸ்டேடியத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர், பொருளாளர், முன்னாள் செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விளையாட்டு விழாவில் சுமார் 1500ம் மேற்பட்ட சொந்தங்கள் குழந்தைகளோடு கலந்துகொண்டு அவர்கள் திறமைகளை வெளிப்படுத்த ஒவ்வொரு போட்டியிலும் பங்குப்பெற்று சிறப்பித்தனர். அதில் கிரிக்கெட், வாலிபால், துரோபால், ஓட்டப்பந்தயம், கபடி போன்ற போட்டிகளில் கலந்து கொண்டு திறமைகளை வெளிப்படுத்தி சிறப்பு விருந்தினரிடம் வெள்ளிப்பதக்கங்கள் பெற்றனர்.

இந்த விளையாட்டுவிற்கு வந்த அனைத்து சொந்தங்களுக்கும் கொங்கு விருந்து (சைவம், அசைவம்) வழங்கப்பட்டது. விளையாட்டு நிறைவு விழாவில் நமது சமுதாயத்தின் பாரம்பரிய வள்ளி கும்மி நடன நிகழ்ச்சி சுமார் 80ம் மேற்பட்டோர் கலந்துகொண்டு வண்ணமிக்க நடனத்தை சிறப்பித்தனர். இந்த விளையாட்டு விழாவில் திருமண பதிவேற்றம் கிட்டதட்ட ஒன்பது வரன்களை பதிவேற்றம் மற்றும் சங்கத்தின் புதிய உறுப்பினரர் பதிவேற்றம் நடைபெற்றது.

விழாவிற்கு வந்த அனைத்து சொந்தங்களுக்கும் மற்றும் குழந்தைகளுக்கும் டீ சர்ட் வழங்கப்பட்டது. இந்த விளையாட்டு விழாவில் உறுதுணையாக முன்னிற்று நடத்திக்கொடுத்த செயற்குழு உறுப்பினர் திரு.சி.அரவிந்தன், முகப்பேர் திரு.கே.சி.பழனிசாமி, NTC குழுமங்களுக்கு மற்றும் வருகைப்புரிந்த உறுப்பினர்களுக்கு அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை கொங்கு நண்பர்கள் குடும்பவிழா 28–07–2024 அன்று காமராஜர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் இவ்விழாவில் சுமார் 3000ம் மேற்பட்ட சொந்தங்கள் வருகைப்புரிந்து விழாவில் கலந்துகொண்டும் இணையத்தளத்தின் வாயிலாக சுமார் முப்பதாயிரம் பேர் பார்த்தும் விழாவை கண்டுகளித்து சிறப்பித்தனர்.

இக்குடும்பவிழாவிற்கு UK, USA, மலேசியா, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா, துபாய், ஜெனிசியா ஆகிய வெளிநாடுகளிலிருந்தும், கர்நாடகா மாநிலத்தின் கொங்கு சங்க தலைவரும், உறுப்பினர்களும், நண்பர்களும் கலந்துகொண்டு இக்குடும்பவிழாவிற்கு வருகைப்புரிந்து விழாவினை சிறப்பித்தனர். மேலும் ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் போரூர், முகப்பேர், பூந்தமல்லி, தாம்பரம் ஆகிய சென்னை கொங்கு சொந்தங்கள் வருகைப்புரிந்து இவ்விழாவினை சிறப்பித்தனர். அதேபோல் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் ஈரோடு, நாமக்கல், கரூர், தருமபுரி, கோயமுத்தூர், பொள்ளாச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்தும் கொங்கு சங்கத்தின் தலைவர்கள் உறுப்பினர்கள் மற்றும் கொங்கு சொந்தங்களும் நண்பர்களும் வருகைப்புரிந்தும் இவ்விழாவினை சிறப்பித்தனர்.

இந்த விழாவில் விருதுப்பெற்ற அனைத்து சாதனையாளர்களுக்கும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாபெரும் விழாவை முன்னின்று சிறப்பாக நடத்திக்கொடுத்த செயற்குழு உறுப்பினர் திரு.கே.நித்தியானந்தன் அவர்களுக்கும் அவரது குழுவிற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாவை கல்வி நிறுவனத்தின் பாரம்பரிய கலை நடன நிகழ்ச்சி 300ம் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குபெற்று சிறப்பாக நடத்திக்கொடுத்தமைக்கு பாவை நிறுவனத்தின் தாளாளர் திரு.நடராஜன் அவர்களுக்கும், திருமதி மங்கைக்கும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல் கொங்கு சமுதாயத்தின் 100கும் மேற்பட்ட பெண்மணிகள் பங்குகொண்டு பாம்பரிய வள்ளி கும்மி, பெருஞ்சலங்கையாட்டம், கருப்பசாமி அருளாட்டம், அம்மனருளாட்டம் நடத்திக்கொடுத்த கொங்குமாமணி திரு.கே.கே.சி.பாலு அவர்களுக்கும் குழுவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆகஸ்ட் 3 ல் முதல் சுதந்திரப்போராட்ட வீரர் மாவீரன் தீரன்சின்னமலை கவுண்டர் அவர்களின் 219 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர், பொருளாளர், முன்னாள் செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், கொங்கு சொந்தங்களும், நண்பர்களும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினார்கள்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் விளையாட்டுவிழா, குழந்தைகள் விழா, மற்றும் குடும்பவிழாவிற்கு நன்கொடையளித்து சமுதாயப்பணியாற்றிய சொந்தங்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகஸ்ட் 10 அன்று மலேசியா கொங்கு குடும்பவிழாவில் சங்கத்தின் சார்பாக நானும், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தோம். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக மலேசியா கொங்கு மன்றத்திற்கு கல்வி நிதிக்காக ரூ.5 லட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 15 அன்று 78வது சுதந்திர தினத்தையொட்டி நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் வெள்ளிவிழா இல்லத்தில் கொடியேற்றப்பட்டது. இந்த இனியநாளில் சங்கத்தின் தலைவர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சங்கத்தில் தங்கி இருக்கும் மாணவ மானவிகளுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இதுவரை வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டு பல்வேறு நலன்திட்டங்களை செய்தும் மற்றும் கொங்கு சொந்தங்களுடன் இணைந்து பல்வேறு சேவைகளை செய்தும் மற்ற மாநில கொங்கு சங்கத்தில் தொடர்புகள் ஏற்படுத்தி ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்தும் நம் கொங்கு உறவுகளை மேம்படுத்தியும் வருங்கால இளம் சமுதாயத்தினருக்கு எடுத்துக்காட்டாகவும் சங்கம் செயல்பட்டது. பெருவாரியாக சொந்தங்கள் மலேசியாவிலும், கடர்நாடகாவிலும், UK விலும் பெருமளவில் சொந்தங்களை தொடர்புகளை ஏற்படுத்தி சங்கத்தை மேம்படுத்தப்பட்டது. அதேபோல் கார்நாடகாவிலும், டெல்லியிலும் கொங்கு சொந்தங்கள் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி சங்கத்தின் வளர்ச்சியை கண்டுள்ளது.

அதேபோல் இதர வெளிநாடுகளிலும் ஆப்ரிகா, சிங்கப்பூர், ஜெனிவா போன்ற நாடுகளில் கொங்கு சொந்தங்கள் உறவுகளின் தொடர்புகளை மேம்படுத்தி பலகொங்கு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தாய்சங்கமாக விளங்கியுள்ளது. வளர்கின்ற இளம் சமுதாயத்தினர் அந்தந்த மாநிலத்திலும், மாவட்டத்திலும் நம் உறவுகளை மேம்படுத்தி கொங்கு இனத்தை பாதுகாத்தும் கொங்கு வளர்ச்சியடைய வேண்டும். சங்கப்பணியில் இளம் வயதிலேயே ஈடுபடவேண்டும். சங்க உறுப்பினர்கள் தங்களுடைய மகன் மகளை சமுதாயப்பணியாற்றுவதற்கும், கொங்கு உறவை மேம்படுத்துவதற்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினராக பதிவேற்ற வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2023–2024 க்கான ஆண்டறிக்கை கூட்டம் செப்டம்பர் 29ம் தேதி நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

நன்றி!



**கே.கே.ரமேஷ்**
தலைவர்
செல் : 98410 76117

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## சங்கத்தின் உறுப்பினர்களுக்கு விலாசம் மாற்றம் வேண்டுகோள் ! கவனத்திற்கு

அன்புடையீர்,

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு! மாதந்தோறும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திலிருந்து மாத மலர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் சுமார் 400 புத்தகங்கள் விலாசம் மற்றும் அலைபேசி எண். தவறாக இருப்பதாலும், சங்கத்திற்கு திரும்ப வந்துவிடுகிறது. ஆகையால் உறுப்பினர்கள் இந்த படிவத்தில் உறுப்பினரின் சரியான உறுப்பினர்எண், விலாசம், மின்னஞ்சல், அலைபேசி எண் ஆகியவற்றை பூர்த்தி செய்து சங்கத்திற்கு அனுப்பு வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினராக விரும்பும் சொந்தங்கள் கொங்குநண்பர்கள் சங்கத்தின் www.kongunanbargalsangam.com இணையதளத்தில் Membership Form Download செய்து தங்களுக்கு தெரிந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று சங்க விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதற்குண்டான தொகை காசோலையாகவோ, பணமாகவோ படிவத்தில் உள்ள வங்கிகணக்கிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### விலாசம் மாற்றம்

| **Old Address :** | **New Address :** |
|---|---|
| Membership No. | Membership No. |
| Name | Name |
| Address | Address |
| Cell | Cell |
| Mail ID | Mail ID |

**மலர் பெறாதவருக்கு :**

தாங்கள் விலாசம் மாற்றம் செய்திருந்தாலும், தொலைபேசி எண். மற்றும் மின்னஞ்சல் மாற்றம் செய்திருந்தாலும், இந்த படிவத்தின் மூலமாக பூர்த்தி செய்து சங்கத்தின் அலுவலகத்திற்கு பதிவேற்றத்தில் சேர்த்து புதுப்பிக்க கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் காலமான உறுப்பினர் அவருடைய வாரிசுதாரர்கள் உறுப்பினர் எண்ணையும், தொலைபேசி எண், மின்னஞ்சல் போன்வற்றை சங்கத்திற்கு தெரியப்படுத்தவும்

**பெறுநர்,**

"வெள்ளி விழா இல்லம்" 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044–4351 0460, 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com



# இயற்கையின் பாதையில்

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

இனிதே பரந்து விரிந்து கிடைக்கின்ற இந்த உலகில் நடந்துவரும் நிகழ்வுகளை ஊன்றிப் பார்த்து ஆலோசனை செய்தால் ஒருகணம் பயம் தோன்றினாலும் மறுகணம் நமது அயராத நடவடிக்கைகளாலும், உதவிகளாலும் அவற்றை மக்கள் மனதில் நிலையாகம் படிந்து அவர் மணம் அறுபட்டுப் போகும் அளவுக்கு இல்லாமல் நிவர்த்தி செய்து ஓரளவு கொள்ளச் செய்து வருகின்றோம்.

### இயற்கை நிகழ்வுகள்

நிலநடுக்கம், சுனாமி அல்லது ஆழிப் பேரலை, எரிமலை காட்டுத்தீ, மேக வெடிப்புப் பெருமழை, பெருவெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்றவற்றால் ஏற்படும் அழிவு உயிரிழப்பு, பொருளிழப்பு போன்றவற்றை நாம் அவ்வப் பொழுது சமீப காலமாகப் பார்த்து வருவதால் மக்கள் படும் சொல்லொணாத் துயரம் நமது கண் முன் வந்து நிற்கின்றது. கணக்குத் தெரிந்த மனிதன் அவற்றை அளவீடு செய்து மதிப்பிட்டுப் பார்க்கின்றான்; நிவாரணம் தேடுகின்றான்.

ஆனால், இதன் மறுபக்கம் விலங்குகள்,தாவரங் – கள், கடல்வாழ் உயிரினங்கள் எவ்வாறு மேற் கண்ட நிகழ்வுகளின் போது அழிவுறுகின்றன என்ற கேள்விக்கு நாம் அவ்வளவாக மதிப்பீடு என்ற நிலைக்கு வருவதில்லை. மேலும் அவற்றின் பொழுது சுற்றுப்புறச்சூழல் என்பது என்னவாகின்றது என்பதும் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் மனித அழிவு என்ற ஒன்று வரும்பொழுது நாம் மற்ற அழிவுகளைப்பற்றி அவ்வளவாகக் கருத்தில் கொள்வதில்லை என்பதே நிதர்சன உண்மையாகும்

### எப்படி இருந்தோம்?

“நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம் நடபையிலோம் ஏமாப்போம் பிணியறியோம்”

என்று சமயக் குரவர் பாடியதன் இலக்கணமாக நமது முன்னோர்கள், யாருக்கும் நாங்கள் அடிமை இல்லை, சாவைக் கண்டும் அஞ்சுவதில்லை, நாங்கள் ஒன்னுபட்ட உழைப்புடன் சந்தோஷத்துடன், நோய் நொடி இல்லாமல் செல்வாக்குடன் தெய்வ நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று மார்தட்டினார்கள். இயற்கையாம் பருவமும் மழையும் ஒத்துழைத்தன. விளைச்சலும் பெருகியது. இயற்கை ஒத்துழைத்தது.

### எப்படி இருக்கின்றோம்?

இயற்கையின் ஒத்துழைப்பு என்பது தற்பொழுது இல்லை என்றே சொல்ல வேண்டி உள்ளது. இந்த ஒரு வருட காலத்திலும், அதற்கு முந்தைய வருடத்திலும் விவசாயிகளுக்கு அளவற்ற வறட்சியும், தண்ணீர்ப் பற்றாக்குறையும் நிறையப்

பகுதிகளில் இருந்து வந்தது . ஆனால் அவை நமக்குக் கண் கூடாகத் தெரியவில்லை. வாய்க்கால் பாசனத்தின் கடைக்கோட்டில் இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் இருந்து கொண்டேதான், நெல் பயிரிட்ட விவசாயிகள் அல்லலுற்றனர். பின்பு விளைச்சலுக்குப் பின்னர், அறுவடையின் போதும் அதற்கு முன்னரும் மழை கொட்டி வெள்ளக் காடு ஆக்கி, நெற்கதிர்கள் அழுகி நாசமாயின விற்பனையின் போலும், தற்பொழுது, மழை பெய்து விற்பனைக் கூடங்களில் சேருகின்றன

விளைச்சல் கண்டும், சில இடங்களில் விற்பனைக் கூடங்களை அரசு அமைக்கும்பொழுது, வீணாக மழையில் நனையவைக்கும் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு நெல்மணிகளை திறந்த வெளியில் குவிக்க விடாமல், கூரையுள்ள நெல் விற்பனை மையங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேலும், கேரள மாநிலத்தில் வயநாடு, முண்டக்கை போன்ற சில பிரதேசங்களில் ஏற்பட்ட, மழையால் அளவற்ற வெள்ளம் மேற்கொண்ட நிலச்சரிவுகளால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் வீடுகள் அழிவு, இயற்கையின் கோரத் தாண்டவம் என்றே சொல்லவேண்டும்.

### என்ன காரணம்?

கால நிலைமாற்றம், மேகவெடிப்பு மழை, கடும் வெள்ளம், நிலச்சரிவு மற்றும் தண்ணீர் புகுந்து புதுத்தண்ணீர்த் தடங்களை ஏற்படுத்துதல் போன்ற குறைகளுக்கு நாம் ஒரு விதத்தில் காரணமாகவே அமைகின்றோம்.

“புவியைக் காப்போம், ஆறுகளைக் காப்போம்”

வன விலங்குகளைக் காப்போம் என்று மேடைகளில் கூக்குரல் ஒருபக்கம் ஒலித்துக்கொண்டுதான் உள்ளது.

மறுபக்கம் குடும்பத்திற்கு, நபர்களின் எண்ணிக்கைக்கு மேல் வாகனங்களை வாங்கி உபயோகித்துச் சூழ்நிலை வெப்பமாகச் செய்து புவி



வெப்பமாய்வதற்கு துணை போகிறோம், சாலைகளில் உள்ள பெரிய பெரிய மரங்களையெல்லாம் அரசு எந்திரம் வெட்டித் தள்ளி பூமியை வெப்ப மயமாக்குகிறது; வீட்டு மலைகளை உருவாக்க விவசாய நிலங்களில் உள்ள தாவர அமைப்பை அழித்தது. தார்ரோடு முதல் கட்டிடங்கள் வரை மெருகேற்றிச் சூரிய வெப்பம் ஒரு கட்டத்திற்குப் பின்னர் திருப்பிப் பிரதிபலிக்கச் செய்யும் முட்டான் தனம், அளவற்ற வெப்பத்தை வெளியேற்றும் தொழிற் சாலைகள் நிறுவனங்கள்; இவ்வாறு நாம் சொல்லிக் கொண்டே செல்லலாம். எண்ணற்ற கட்டிடங்களும்தான். மற்றும் ஒரு கட்டத்திற்குமேல் நாம் எல்லாவற்றையும் செய்து விட்டு, சரளை மண் கலந்த செம்மண் பாங்குள்ள பொது பொறுப்பான, தொடர் பாறைள் இல்லாத மலைச்சரிவுகளில், நீர் நிலைக்கருகில், நில அமைப்பு விற்பன்னர்களின் அறிவுரையையும் மீறி மக்கள் வீடு கட்டும் மெத்தனப் போக்கு, அதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கும் அரசு, இவை இரண்டுமே எம்மாதிரியான அழிவா ஏற்படுத்தி இருக்கின்றன என்று இன்று கண்டு கொண்டோம்.

### என்ன செய்ய வண்டும்?

மக்கள் கண்ணீர் வடிக்கும் நேரத்தில், விலங்குகள் கூட மனிதனுக்கு ஒத்துழைக்கின்றனர் துணை புரிகின்றன. மக்கள் இடர்ப்பாடுகள் ஏற்படும்பொழுது நாம் ஒருவருக் கொருவர் கனத்த அழிவு’ என்ற சொல்லை இதயத்தில் ஏற்றி, அவர் இரத்தம் நம் உடலில் ஓடும் இரத்தம் ? ‘நமக்கும் இது வர எத்தனை நாள் ?’’ என்று எண்ணி உதவி செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம்.

நமது மாநிலமோ அல்லது அடுத்த மாநிலமோ எல்லலா மக்கள், எம்மக்கள் சகோதரர்கள் என்று பலபேர் உதவ வந்திருப்பதுவே மனிதப் பண்பு மற்றும் அவன் தான் மனிதன்.

வெள்ள நிவாரனத்திற்கும் நிதி ஒதுக்க மாட்டோம்; தேசீய இடர்ப்பாடுகளையும் கண்டுகொள்ள மாட்டோம் என்பது ஐந்தறிவு படைத்த விலங்குகள் கூட எள்ளிச் சிறிக்கும் இருதமற்ற காட்டுச் செயல் என்பதைப் புரித்து கொள்ளவேண்டும்.

யாவர்க்கும் உதவிக்கரம் நீட்டுவோம். வாழ்க தமிழ்; வளர்க நம் பன்பாடு.



## என்றும் நலமுடன் வாழ...

### தெரிந்து கொள்வோம் நாடித் துடிப்பை பற்றி

# மிகை நாடித் துடிப்பு (Tachycardia)

பத்மஸ்ரீ கொங்குமாமணி **டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர், சென்னை

பிறந்த குழந்தைக்கு நாடித் துடிப்பு சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால், முதுமையில் நாடித் துடிப்பு சாதாரணமாக சற்று குறைவாகவே இருக்கும். நாடித் துடிப்பு மூலம் பல நோய்களைக் கண்டறிய முடியும்.

### நாடித் துடிப்பு அதிகரித்தல்

முதுமையில் பொதுவாக நாடித் துடிப்பு 60 முதல் 80 வரை இருக்கலாம். சிலருக்கு எந்த தொல்லையும் இல்லாமல் 50 அல்லது 80க்கு மேலே கூட இருக்கலாம். நாடித் துடிப்பு ஒரு இடத்தில் 100க்கு மேலே இருந்தால் அது மிகை நாடித் துடிப்பு என்று கூறப்படும்.

### காரணங்கள்

### உடற்பயிற்சிக்குப் பின்பு

வேகமாக நடத்தல் மற்றும் ஆசனம் போன்ற பயிற்சிகளை சற்று அதிக நேரம் செய்தால் நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 80க்கும் மேலே கூட அதிரிக்கலாம். இதனால் நெஞ்சில் ஒரு படபடப்போ, வலியோ எதுவும் இருக்காது. பயிற்சியை முடித்த சில நிமிடங்களில் நாடித் துடிப்பு பழைய நிலைக்கே வந்துவிடும்.

### உணவிற்கு பின்பு

வயிறு நிறை உணவு உண்ட பின்பு சிலருக்கு நாடித் துடிப்பு சிறிது நேரம் வரை நாடித் துடிப்பு சற்று அதிகரிக்கலாம். ஆனால் உணவு செரிமானம் ஆனதும் நாடித் துடிப்பும் பழைய நிலைக்கே வந்துவிடும். இதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை.

### மன அமைதியின்மை

மனப்பதட்டம் மற்றும் கோபம் போன்ற நிலையில் நாடித் துடிப்பு சற்ற அதிகமாக இருக்கும். மனப்பதட்டத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து தக்க சிகிச்சையை தொடர்ந்து அளித்தால் நாடித் துடிப்பு குறைய வாய்ப்புண்டு. இதற்கு மன அமைதியைக் கொடுக்கும் மாத்திரை மற்றும் தியானம் மிகவும் உதவும்.

### உடல் வெப்பம் அதிகரித்தல்

முதுமையில் வெப்பத்தை உணரும் சக்தி சற்று குறைந்துவிடும். ஆகையால் அதிக வெப்பத்தை அவரால் உணர முடியாது. வெப்ப நிலை சுமார் 100 டிகிரிக்கு மேலே அதிகரித்தால், அவருடைய நாடித் துடிப்பும் அதிகரிக்கும். வெப்பம் குறையக் குறைய நாடித் துடிப்பு குறைந்து பழைய நிலைக்கே திரும்பிவிடும். காய்ச்சல் அதிகரிக்கும் பொழுது நாடித் துடிப்பும் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

### அதிக வலி

உடலில் எந்த பகுதியில் அதிக வலி ஏற்பட்டாலும் நாடித் துடிப்பு அதிகரிக்கும்.

உதாரணம் : தலைவலி, மார்பு வலி, வயிற்று வலி. தக்க சிகிச்சை பெற்று வலி குறைய, நாடித் துடிப்பும் குறைந்து விடும்.

நோய்கள்

இதய நோய்களான மாரடைப்பு மற்றும் இதயம் வலிமை இழத்தல் போன்ற நிலையில் நாடித் துடிப்பு அதிகரிக்க வாய்ப்புண்டு. இத்தொல்லைகளுக்கான தக்க சிகிச்சையளித்தால் நாடித் துடிப்பு குறைந்து விடும்.

தைராய்டு சுரப்பி அதிகமாக சுரக்கும் தைரோடாக்சிகோசிஸ் எனும் நோயிலும் நாடித் துடிப்பு அதிகரிக்கும்.



### மருந்துகள்

சில மருந்துகளினாலும் நாடித் துடிப்பு அதிகரிக்கும். உதாரணம் : தைராய்டு மாத்திரை, அட்ரோபின். மருந்தின் அளவை குறைத்தால் போதும், நாடித் துடிப்பு குறைந்து விடும்.


### நாடித் துடிப்பு அதிகரித்தலுக்கு பிற காரணங்கள்

அதிகப்படியான மது அருந்துதல், காபி அருந்துதல், புகைப்பிடித்தல் மற்றும் இரத்தசோகை போன்ற வகைகளாலும் நாடித் துடிப்பு அதிகரிக்கும்.

### சிகிச்சை முறை

நாடித் துடிப்பு அதிகரிக்கும் போது பொதுவாக நெஞ்சில் ஒரு படபடப்பு தோன்றும். நெஞ்சில் வலி இருக்காது. உடலில் சற்று வியர்த்துக் கொட்டும். அதை உறுதி செய்ய ECG எடுத்து பார்ப்பது அவசியம். அதிக நாடித்துடிப்புக்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு தக்க சிகிச்சையளித்தால் நாடித்துடிப்பு சரி செய்து நலமாய் வாழமுடியும்.

சிலருக்கு நாடித்துடிப்பு விட்டுவிட்டு வரும் சில நேரங்களில் நாடித்துடிப்பு சரியாகவும், விட்டுவிட்டும் மற்றும் மாறிமாறி வேகமாக துடிக்கும் (Irregular Heart Beat) சிலருக்கு பகலில் நாடித்துடிப்பு சரியாக இருக்கும். ஆனால் இரவில் நாடிதுடித்து குறைந்தோ அதிகரித்தோ இருக்கும். இதை கண்டறிய ஒரு கருவியை மார்பின் மேல் வைத்து விட்டுவிடுவார்கள். (Holter monitor) ஒரு நாள் கழித்து எடுத்துப்பார்த்தால் சுமார் 24 மணிநேரத்தில் நாடித்துடிப்பு எப்படி இருப்பது என்பதை துள்ளியமாக தெரிந்துக்கொள்ளலாம். அதற்கு தகுந்தபடி தக்கசிகிச்சையத்து நாடிதுடிப்பு சரியான நிலைக்கு கொண்டுவர முடியும்.




## முதியோர் நலம்
## தமிழ் வளர்ச்சித் துறையின் சிறப்பு பரிசை பெற்ற நூல்

தமிழக அரசின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சார்பில் 2022 இம் ஆண்டுக்கான, மருந்தியல் – உடலியல்–நலவியல் எனும் பிரிவில் முதியோர் நல மருத்துவர் வி.எஸ். நடராஜன் அவர்களின் ''முதியோர் நலம்' எனும் நூல், சிறந்த நூலுக்கான பரிசை மாண்புமிகு தமிழக வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் 11–07–2024 அன்று வழங்கினார். இது தமிழ் வளர்ச்சி துறையின் மூலம் மருத்துவர் பெறும் இரண்டாவது நூலாகும்.



தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் 1990 ஆம் ஆண்டு முதியோர் நல மருத்துவர் வி.எஸ். நடராஜன் அவர்களின் ''முதுமையிலும் இன்பம்' எனும் நூல் மருந்தியல் உடலியல் உணவியல் நலவியல் எனும் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்நூலுக்கான பரிசை அன்றைய முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களிடமிருந்து பெறப்பட்டது. டாக்டர் வி.எஸ். நடராஜன் அறக்கட்டளையின் சார்பாக நூலின் பதிப்பாளர் திரு. இராஜசேகரன் மணிமாறன், நிர்வாக அறங்காவலர் அவர்கள்'' பாராட்டு சான்றிதழை' அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

நூலின் பக்கம் : 256, நூலின் விலை : 250 /–, தொடர்புக்கு : 8122102173 / 9994902173

# குழந்தைகள் விழா - 2024






















# குழந்தைகள் விழா - 2024

















# விளையாட்டு விழா - 2024




















# விளையாட்டு விழா - 2024


















# கொங்கு உறவே இது உடல் நலத்திற்கே!

## வெயிட் லாஸ், வெயிட் கெயின் இரண்டுமே சாத்தியம்!

உடல் எடையை அதிகரிக்க விரும்பினாலும் குறைக்க விரும்பினாலும் முதலில் மாற்றம் செய்ய நினைப்பது உணவுமுறையைத்தான். ஆனால் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் எடை அதிகரிக்கவும் எடையைக் குறைக்கவும் ஒரே வகையான உணவுகளைத்தான் நிபுணர்கள் ரிதுரைப்பது புரியவரும். உதாரணத்துக்கு, சிறுதானியங்கள், சிக்கன், மீன், முட்டை பருப்பு வகைகள்...இப்படிப் பல. ஒரே உணவு எப்படி நேரெதிரான இரண்டு செயல் பாடுகளுக்கும் உதவுகிறது என்ற சந்தேகத்துக்கு விளக்கமளிக்கிறார். சென்னையைச் சேர்ந்த ஊட்டச்சத்து ஆலோசகர் எஸ்.தங்கமணி.

“எடை குறைவாக இருந்தாலும் மரபணு ரீதியாக இந்தியர்களுக்கு உடலில் கொழுப்பின் அளவு அதிகமாக இருக்கும். எடையைக் குறைக்கும்போது உடலில் இருக்கும் கொழுப்பு குறைய வேண்டும். கொழுப்பு குறையாமல் எடை குறைந்தால் அது ஆரோக்கியமான எடைக்குறைப்பு இல்லை. உடல் எடை குறைவதற்கு சாப்பிடும் கலோரிகளின் அளவைக் குறைக்கும் உணவுமுறையைப் பரிந்துரைப்போம். உணவில் மாவுச்சத்தின் அளவு குறைவாகவும் புரதம் மற்றும் நார்ச்சத்து அதிகமாகவும் இருப்பதுபோல் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அதேபோல எடை அதிகரிக்க முயலும்போது தசையின் அடர்த்தி (Muscle Mass) அதிகரிக் வேண்டும். உடலில் கொழுப்பின் அளவு அதிகரிக்கக்கூடாது. அதற்கு ஆரோக்கிய உணவுகளின் மூலம் கலோரிகளின் அளவை அதிகரிக்கும் உணவுகள் பரிந்துரைக்கப்படும். எடை குறைக்கவும். எடை அதிகரிக்கவும் ஒரே மாதிரியான உணவுகளை எடுத்துக்கொள்ளச் சொன்னாலும் அவற்றின் அளவு, எடுத்துக்கொள்ளும் முறை ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் செயல்பாடுகளும் மாறுபடுகின்றன.

### சிறுதானியங்கள்

உடல் எடை அதிகரிப்பதற்கு சிறுதானியங்கள் நல்லது என்றாலும் அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொண்டால் ஒருநாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அளவைவிட கலோரியின் அளவு அதிகரிக்கும். இதனால் ஆரோக்கியமான எடை அதிகரிப்பு ஏற்படாது. எடை அதிகரிக்க விரும்புபவர்கள் சிறுதானியங்களைப்

பதப் படுத்தாமல் அப்படியே சமைத்து சாப்பிட வேண்டும். நிபுணர்கள் பரிந்துரைக்கும் அளவோடு, புரதச்சத்துள்ள உணவுகளையும் சேர்த்துச் சாப்பிட வேண்டியதுஅசி அதேபோல சிறுதானியங்களைக் கூழாகவோ, கஞ்சியாகவோ சாப்பிடும்போது எளிதில் ஜீரணமாகி, சீக்கிரம் பசிக்கத் தொடங்கிவிடும். இதனால் மீண்டும் மீண்டும் உணவை எடுத்துக்கொள்வார்கள். எடை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. சிறுதானியங்களை திட உணவாக, குறைந்த அளவில் சாப்பிடும்போது உடல் எடையை நிர்வகிக்கவும் குறைக்கவும் உதவும்.

## உணவு மட்டுமே உதவாது....

எடை குறைக்க விரும்புபவர்களும் அதிகரிக்க விருப்ப பவர்களும் கவனம் செலுத்த வேண்டிய வேறு சில விஷயங்கள் குறித்து விளக்குகிறார் சென்னையைச் சேர்ந்த உணவியல் ஆலோசகர் பி.வி.லக்ஷ்மி...

“இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐசிஎம்ஆர்) பரிந்துரைகளின்படி, உடல் இயக்கம் இல்லாத வாழ்க்கை முறையைப் பின்பற்றும் ஆண்கள் சராசரியாக ஒருநாளைக்கு 2,100, பெண்கள் 1,500 கலோரிகள் வரை எடுத்துக்கொள்ளலாம்.

இரண்டுக்குமான உணவுமுறைகளைப் பரிந்துரைக்கும் போதும் வயது, பாலினம், வாழ்க்கைமுறை, உடல் இயக்கம். உடல் அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில்தான் ஒருவர் எத்தனை கலோரிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நிபுணர்கள் தீர்மானிப்பார்கள். எனவே எடை அதிகரிக்க விரும்பி னாலும், குறைக்க விரும்பினாலும் நிபுணர்களின் ஆலோசனை யின்றி டயட் முறைகளைப் பின்பற்றக்கூடாது.

ஒருவர் உடல் நிறை குறியீட்டு எண் (பிஎம்ஐ) நார்மலாக இருந்து விட்டால் தற்போது பின்பற்றிக்கொண்டிருக்கும் உணவுப்பழக்கம். உடற்பயிற்சி ஆகியவற்றையே தொடர்ந்தால் போதுமானது. ஆனால் எம்.ஐ குறைந்தாலோ கூடினாலோ வளர்சிதை மாற்றத்தில் அல்லது உடலில் ஏதேனும் பிரச்னை இருக்கிறது என்று அர்த்தம். எனவே, உடனடியாக நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.



எடைக்குறைப்பு அல்லது அதிகரிப்புக்கு உடற்பயிற்சி மற்றும் மன அழுத்தம் இல்வாத வாழ்க்கையும் முக்கியம் என்பதை மறக்கக்கூடாது” என்றார்.

## அசைவ உணவுகள்

புரதம்மிக்க உணவான அசைவ உணவுகளை, அதிகம் எண்ணெய் சேர்க்காமல் சமைத்துச் சாப்பிட்டால் எடைக் குறைப்புக்கு உதவும். அதையே பொரித்து, வறுத்துச் சாப்பிடும்போது கலோரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து எடை அதிகரிக்கும். முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் சாப்பிட்டால் எடைக் குறைப்புக்கு உதவும். மஞ்சள் கருவுடன் சேர்த்துச் சாப்பிடும் போது எடை அதிகரிக்கும்.

## நட்ஸ்

நட்ஸ் வகைகளை இரண்டு செயல்பாடுகளுக்கும் எடுத்துக்கொள்ள பரிந்துரைப்போம். எடை குறைக்கும் முயற்சியில் இருப்பவர்களுக்கு ஒருநாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரிகளின் அளவில் குறிப்பிட்ட அளவு நல்ல கொழுப்புச்சத்துள்ள நட்ஸ் வகைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எடை அதிகரிக்க விரும்புபவர்களுக்கு சற்று அதிகமான அளவு கலோரிகள் கிடைக்கும் வகையில் நட்ஸ் எடுத்துக்கொள்ளலாம். டயட்டை பொறுத்தவரை, கார்போ ஹைட்ரேட், புரதம், கொழுப்புச்சத்து, நார்ச்சத்து என அனைத்து சத்துகளும் சரியான அளவில் எடுத்துக்கொள்ளும்போதுதான் எடைக் குறைப்போ, எடை அதிகரிப்போ ஆரோக்கியமாக நீடிக்கும்” நுன்றார். அன்பதை அறிவோம்.

■

# வாழ்த்துகிறோம்



***சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் அவர்களின்***
***“வெற்றிச் சிந்தனைகள் 100” நூல் வெளியீடு***

சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் அவர்களின் 77–வது படைப்பாகிய ”””வெற்றிச் சிந்தனைகள் 100”””” என்ற நூலினை இன்று 10.07.2024, புதன்கிழமை கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் கோவை மாநகர காவல் ஆணையர் திரு.ஏ.பாலகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் வெளியிட கோவை மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் இணை தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர் திரு.மு.செந்தில்விநாயகம் அவர்கள் பெற்றுக் கொள்கிறார். உடன் சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் மற்றும் திரு.ஆ.சரவணன் ஆகியோர் உள்ளனர்.

# வாழ்த்துகிறோம்



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக மலேசியா கொங்கு மன்றத்தின் புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. மேலும் பல்வேறு பணிகளிலும், சேவைகளிலும் சிறப்பாக செயல்படுவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.



# தமிழகத்தின் நுழைவு வாயில்

## கொங்கு நாடு

கொங்கு நாடு தமிழகத்தின் மேற்குப்பகுதி மற்றும் வட மேற்குப்பகுதியில் அமைந்துள்ள நிலப்பரப்பாகும். தற்போதைய அரசியல் மாவட்டப் பிரிவுகளான கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, வேடசந்தூர் வட்டங்கள் அடங்கும்.

கொங்கு நாட்டைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஆதாரம் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை நூல்களாகும். இதில் பதிற்றுப்பத்து, புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றினை நூல்களடங்கும் தகடூர் யாத்திரை, கொங்குமாக்கரை, ஆகியன கொங்குநாட்டு நிகழ்வுகளை அதிகம் விளக்குகின்றன.

### கொங்கு நாடு தனி நாடு :

தமிழகம் கடைச்சங்க காலத்தில் ஆறு நாட்டுப்பிரிவுகளான இருந்தன. அவை துளுநாடு, பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, மற்றும் கொங்குநாடு, என்பனவாகும். பின்னர் துளுநாட்டைத் தவிர்த்து தமிழகம் ஐந்து மண்டலமாக பிரித்து கூறப்பட்டது.

### தமிழ்மண்டலம் ஐந்து – திருமூலர்

வியன் தமிழ்நாடு ஐந்து - தண்டியலங்காரம்

சங்க இலக்கியங்களில் கொங்கு நாடு தனி நாடாகவே பாடப்பட்டுள்ளது. புறநானூறும், பதிற்றுப்பத்தும் தனி நாடு என்பதை நிரூபிக்கின்றன.

ஒளிறுவாள் கொங்கர் - குறுந்தொகை (383)

ஆகெழுகொங்கர்நாடு - பதிற்றுப்பத்து (22)

வாடாப்பூவின் கொங்கர் ஒட்டி - அகநானூறு (253)

கொங்குப்புறம் பெற்ற கொற்ற வேந்தே - புறநானூறு (373)

சேரமன்னன் கண்ணகி மறைவுக்குப்பின் விழா எடுக்கும் வேளையில் பாண்டிய, சோழ, இலங்கை மற்றும் அப்போது கொங்குநாட்டை ஆண்ட கோசக அரசர்கலை வரவழைத்து சமமாக கௌரவித்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

கொங்கினங்கோசர் விழாவொடு சாந்திசெய்ய சிலப்பதிகாரம் பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டைவிட்டு கொங்கு நாட்டி வருவதை "குரவலர் சோலை அணிந்திருப் பாண்டிக் கொடுமுடி அணைத்து கொங்கில்" என்று சேக்கிழார் பெருமான் பாடுகின்றார். மேலும் கொங்குநாட்டில் 66 சங்ககால தமிழ்ப்புலவர்கள் வாழ்ந்துள்ளனர்.

### கொங்குநாடு பெயர் வழங்க காரணம் :

கொஞ்கு என்ற பெயருக்கு தமிழ்ப்புலவர்களால் பல பொருள்கள் கூறப்படுகின்றன. இதில் நறுமணம், தேன், மகரந்தம், மற்றும் மலைகள் என பல பொருள்படும். எனினும் இவற்றில் குன்று, பாறைகள், மலைகள் என இம் மூன்றையும் சம்பந்தப் படுத்துவே 'கொங்கு' என பொருளாகும்.

"கொங்கு" என்ற பெயரில் வாழ்ந்த அரசர்கள்
கொங்கு ராயன் - சிற்றரசன்
கங்கன் – சங்ககால சிற்றரசன்
கொங்கணிவர்மன் - கங்கமன்னன்
கொங்கணிமகாதிராயன் - கங்க மன்னன்

பிரிதிவி கொங்கணி மகாதிராயர் - களிகமன்னன்

நாட்டுப்பிரிவுகள் என்று பார்த்தோமானால் கொங்குநாடு, கொங்காணம், கொங்கணக்கடற்கரை ஆகியன.

**கொங்குநாட்டில் வாழ்ந்த புலவர்கள்**

கொங்கு வேளிர், கொங்கு பிராட்டியான ம்ற்றும் 17 ஆம் நூற்றாண்டில் கொங்கு புலவர் சங்கம் இருந்துள்ளது. பண்டைய நூல்களில் கொங்கு மாக்கதை, கொங்குமண்டல சதகம், கொங்குதேச ராசாக்கள் ஆகியவற்றை குறிப்பிடலாம். கொங்கு நாட்டில் வாழ்ந்தமக்கள் கொங்கர் எனவும், அவர்கள் படை கொங்கர் படை என்றும் அழைக்கப்பட்டது. கொங்கன் கொங்கரையன், என்று மனிதர்களுக்கு பெயர் சூட்டப்பட்டன. மைசூர் அரசர்கள் கொங்கு நாட்டை வென்ற பிறகு தங்களை கொங்கு ராசாக்கள் என பெயர் சூட்டிக் கொண்டனர்.

**கொங்குநாட்டு இயற்கையமைப்பு**

கொங்குநாட்டின் வடபகுதியில் மேலகிரி குன்றுகள் தருமபுரி தொட்டூர் மலைகளும், வடமேற்கே தலைமை மாதேஸ்வரன்மலை, பிளிரங்கன் மலைகளும், பாலமலை, பருகூர் மலை மலைகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளாக உள்ளன. மேற்குப்பகுதியில் நீல மலைத்தொடர்கள் உள்ளன. இங்குதான் கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் சந்திக்கின்றன. கிழக்கே கந்தசமலை, சேர்வராயன் மலைகளும் போதம்பலை கொல்லி மலை, கல்வராயன் மலை, பச்சைமலைகள் ஆகிய எல்லையாகவும், தெற்கே கொடைக்கானல் மலை, பன்றிமலை, ஆணைமலை ஆகியனவும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையும், எல்லையாக உள்ளன.

கொங்குநாட்டில் 12 ஆறுகள் உள்ளதாக கொங்கு மண்டல சதகம் கூறுகின்றது. இவற்றிற் குறிப்பாக காவிரியின் மேற்கே பவானி, நொய்யல், அமராபதி ஆறுகளும் கிழக்கே சரபங்கா, திருமணி முத்தாறு, தொப்பையாறு ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

**கொங்குநாட்டு எல்லைகள் :** வடக்கு எல்லை : பெரும்பாலை என்றும் சிற்றூர் தற்போது தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம் வட்டத்தில் மேச்சேரி பென்னாகரம் சாலையில் வடக்கே சுமார் 18 கி.மீ. தொலைவில் உள்ளது.

**தெற்கு எல்லை (பழநி – திரு ஆவினன்குடி) :** முருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் மூன்றாவதாக உள்ள கோயிலாகும். திண்டுக்கல் சக்குமேற்கே 55 கி.மீ. தொலைவிலும், தாராபுரத்திலிருந்து தெற்கே சுமார் 40 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

**கிழக்கு எல்லை (குளித்தலை)**

குளித்தலை நகரமானது திருச்சி - கரூர் தேசிய நெடுஞ்சாலையில் காவிரிக் கரையோரம் அமைந்துள்ள ஊராகும்.

**மேற்கு எல்லை – வெள்ளியங்கிரிமலை**

தெற்கு கயிலாயம் எனப்படும் இந்தமலை கொங்குநாட்டின் மேற்கு எல்லையாக கருதப்படுகின்றது. கோவை மாநகருக்கு மேற்கே 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

வடக்கு பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்பு வெளிக்குன்று கிடக்கும்
களித்தண்டலை மேவும் காவிரி சூழ் நாட்டுக்
குளித்தண்டலை யளவு கொங்கு - தனிப்பாடல்

**கொங்கு நாட்டுப்பிரிவுகள்**

கொங்குநாடு வடகொங்கு, தென்கொங்கு, மேல்கொங்கு, கீழ்கொங்கு என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இதுதவிர மழகொங்கு என்ற பகுதி வடகொங்கு பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது. பாண்டிய மன்னன் நெடுஞ்சடையனின் வேள்விக் குடிசெப்பேட்டில் மழகொங்கு பற்றிய குறிப்பு உள்ளது.

சங்க காலத்தில் தமிழகத்திற்கு வியாபார ரீதியாக ரோம, கிரேக்க வணிகர்கள் கடல்வழியாக கேரள கடற்கரைக்கு வந்திரங்கி பின்னர் கொங்குநாட்டு வழியாக தமிழகத்திற்கு வந்தனர். இவர்களுடைய நாணயங்கள், புராதன சின்னங்கள், மணிகள், அணிகலன்கள், ஆகியன கொடுமணல், மற்றும் கரூர் அகழ்வாய்வியல் நிறைய கிடைக்கப்பெற்றன.

கி.மு. 278 இல் மௌரியப்படையெடுப்பு தமிழகத்தின் மேல் கொங்கு நாட்டு வழியாக நடந்தது இதில் மூவேந்தர்கள் மற்றும் அதியமான ஆகியோர் இவர்களை விரட்டியடித்தனர். இதை அத்திக்கும்பம் காரவேலன் அரசனின் கி.மு. 163 ஆம் ஆண்டுகள் வெட்டு உறுதி செய்கின்றது. இதேபோல் சந்திரகுப்தமௌரியர் சமண மதத்தை தழுவி கர்நாடகாவில் உள்ள சரவண பெல குலாவில் தங்கி பின்னர் கொங்குநாட்டு வழியாக தமது சீடர்களை தமிழகத்திற்கு அனுப்பி சமண மதத்தை பரப்பினார். இது நடந்தது கி.மு. 3 ஆம் நூற்றாண்டு

'அரேபியாவிலிருந்து தரமான குதிரைகள் மேற்கு கடற்கரை மற்றும் கொங்கு நாட்டு வழியாகத்தான் தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டது.

கி.பி. 1311 இல் மாலிக்காபூர் தமிழகத்தின் மீது கொங்குநாட்டு வழியாகத்தான் முதலில் உள்ளே நுழைந்து பல நோயில்களை கொள்ளையடித்தார்.

கொங்குநாட்டு வழியாகத்தான் இரட்டர்களைப்பிரர், கங்கர், ஹொய்சாளர், விஜயநகர அரசுகள் உள்ளே நுழைந்து ஆட்சிபுரிந்தனர். இப்படி தமிழக வரலாற்றில் பல முக்கிய அரசியல் நிகழ்வுகளுக்கு காரணமாக இருந்தகொங்கு நாட்டை தமிழகத்தின் நுழைவு வாயில் என்று கூறுவதில் வியப்பேதுமில்லை

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தான பேரூராதீனம்
இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள், கயிலைப்புனிதர் முனைவர்
**திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்**
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
அலைபேசி : +91 98947 61125



Holy Kailash Heritage Meikandar Heirarchy,
Perur Maha Samasthan, Maha Mandaleshvar His Holiness
**Dr. Santhalinga Marudhasala Adihal**
Perur Adheenam, Perur, Coimbatore - 641 010.
E : omadihal@gmail.com | perurmutt@yahoo.com

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர்
Member - Tamilnadu Government Hindu Religious & Endowment Board Higher level Committee

நாள் : 30.07.2024

அருள் வாழ்த்துரை

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

உழுதுண்டு வாழும் உன்னதக் குடிகளுள் கடுமையான உழைப்பும் உயர்வும் கொண்டவர்கள் கொங்கு வேளாளப் பெருமக்கள். அவர்கள் கொங்கு மண்டலத்திலிருந்து சென்னைக்குப் புலம் பெயர்ந்தபோது தொடங்கப்பட்டது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம். இச்சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும் குடும்ப விழா நிகழ்த்தப்பெற்று இவ்விழாவில் பல சான்றோர்களுக்கு விருதுகளை வழங்கி வருகின்றார்கள்.

சமயம், தொழில், சமூக சேவை, விளையாட்டு, கலை, மருத்துவம், வேளாண்மை போன்ற பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி சாதனைகளைப் புரிந்து வரும் அன்பர்களைத் தேர்ந்தெடுத்து விருதுகளை வழங்கி வரும் நடைமுறை பாராட்டுதற்குரியது. இந்நிகழ்வு மேலும் பல தொழில் முனைவோர்களை உருவாக்கும் வகையில் அமைந்துள்ளது. நாம் வெளியூரில் இருப்பதால் இவ்விழாவில் கலந்துகொள்ள இயவில்லை.

அவ்வகையில் இவ்விழாவை ஏற்பாடு செய்த சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திருமிகு இரமேஷ் உள்ளிட்ட நிருவாகக் குழுவினர் அனைவருக்கும் நமது உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விழாவில் விருது பெற்றவர்கள் எதிர்காலத்தில் மாநில அளவில், தேசிய அளவில், உலக அளவில் விருதுகளைப் பெற அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் தமிழ்நெறிவழிபாட்டுத் தந்தை கயிலைக்குருமணி அடிகள் பெருந்தகை அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

இத்துடன் சாந்தலிங்கப்பெருமான் அருட்திருநீற்றுக்காப்பு இணைத்துள்ளோம். அணிந்து இன்புறுங்கள்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

# வாழ்த்துகிறோம்...

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
### குடும்ப விழா 28.07.2024
### பாராட்டு மடல்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க
குடும்ப விழாவாம் கூடும் விழாவில்,
கொங்கு சொந்தங்கள் என்றென்றும் பேசிடும்
சாதனையைப் பாராட்டு முகமாய்,

விருது என்றும் விருந்து என்றும்,
சித்தாந்தத்தை சிறப்பித்தும்,
தொழில் மேதைகளை வழிநடத்தியும்,
சமூக சேவகரை சுமுகமாய் போற்றியும்,
மருத்துவ சேவையின் மகத்துவம் கூறியும்,
இளம் தலைமுறை தொழிலை ஏற்றமுற செய்தும்,
வெளிநாடு வாழ் சொந்தங்களை
கனிவோடு கட்டமைத்தும்,
பெண் சாதனையாளர்களை
கண்ணென போற்றியும்,

கல்விச் சேவையை கருத்துடன் பேணியும்,
வேளாண்துறைக்கு விருதுகள் வழங்கியும்,
விளையாட்டுத் துறையை விறுபெறச் செய்தும்,
கலாச்சாரத்தை கருத்துடன் கவனித்தும்,
திருமணச் சேவையை சிறப்புடன் போற்றியும்,

விருதுகள் வழங்கி விழாவினை உயர்த்திய
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
இமயம் போல் உயர இன்னும் பலர் பயன்பெற,
ஆல்போல் தழைத்து அருகுபோல வேரூன்ற,

எங்கள் ஈரோடு ஐவர்குழு சார்பாக
மனமார்ந்த பாராட்டினை
மகிழ்வுடன் வழங்கிடுவோம்!!

வாழ்க!  வளமுடன்!

ஐவர் குழு,ஈரோடு.

---

சாந்தலிங்கர் தொண்டர் வாழ்க

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் திருவருள் பெருகுக.
தாங்கள் அனுப்பிய "கொங்கு குடும்ப விழா அழைப்பிதழ்"
கிடைக்கப் பெற்றது. மிக்க மகிழ்ச்சி. விழா சிறக்கவும்,
அருள்மிகு அம்பலவாணப் பெருமான் திருவடிகளையும்,
அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளையும்,
[illegible] குருமகா சந்நிதானங்களின் குருவருளையும்
நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டும் தங்களன்பு
அன்புள்ள
[illegible]

ஓம் சாந்தி

06-08-2024

# சங்கத்திற்கு வாழ்த்துரை

அனுப்புனர்,
V.பழனியாண்டி
உறுப்பினர் எண்.121,
சென்னை – 600 028

பெறுநர்,
தலைவர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
சென்னை – 600 014

தாங்கள் திரு.கே.கே.ரமேஷ் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் பொறுப்பில் இருந்து மிகச்சிறப்பாக இவ்வாண்டு ஜூலை 21ஆம் தேதி விளையாட்டு விழாவும், ஜூலை 28ஆம் தேதி குடும்ப விழாவும் இரண்டு விழாக்களும் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அனைத்து பொருப்பாளர்களும் மிக மிக சிறப்பாக ஏற்பாடு செய்து அதனை திறம்பட நடத்தினமைக்காக என்னுடைய பணிவான வாழ்த்துக்களை இந்த கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு
சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர்

---

From
Thanapranesh Kumar K
Bannari Amman Institute of Technology
Sathamangalam - 638 401. Phone : 8870592790

Sathyamangalam
03-02-2024

To
Kongu Nanbargal Sangam
Chennai - 600 014.

Respected Trustees,

Subject : Heartfelt Gratitude for Your Generous Financial Support

I hope this letter finds your well. I am writing to express my deepest gratitude for the generous financial support provided by Kongu Nanbargal Sangam in the form of a grant of Rs.30,000. Your assistance has had a profound impact on my life, and I am truly grateful for your commitment to supporting individuals in need. I feel privileged to be beneficiary of your kindness. This grant has come at a crucial time for me, and it will significatly contribute to my educational expenses. I assure you that your support will not only alleviate my current challenge but also serve as a motivation for me to strive for a better future. Once again, Thank you for your generosity and for making a meaningful impact on my life. I am deeply appreciative of your trust's mission and the tangible support you provide to individuals like myself.

I am sincerely grateful for the opportunity to benefit from your trust.



# குடும்ப விழா - 2024




















# குடும்ப விழா - 2024

















# குடும்ப விழா - 2024

















# குடும்ப விழா - 2024

























சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
குடும்பவிழா
2024
















குடும்ப




குடும்ப விழா










சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்


சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
குடும்பவிழா
2024





# மணமகன் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | S.கிருத்திகா |
| பிறந்த தேதி | : | 14-07-1995 |
| பிறந்த நேரம், இடம் | : | 08:29 pm, சேலம் |
| நட்சத்திரம் / இராசி | : | அவிட்டம் 2 / மகரம் |
| தந்தை பெயர் | : | திரு. V.சரவணன் B.E., |
| தாயார் பெயர் | : | திருமதி A.சாந்தி MA.,B.Ed., |
| குலம் | : | மணியன் |
| உடன் பிறந்தோர் | : | ஒரு தங்கை |
| உயரம் | : | 5.7 feet |
| படிப்பு | : | M.Tech., |
| தொழில் | : | Own Business (TVC Concretes, Readymix Concrete, Bangalore, Chennai, Hyderabad) |
| மாத வருமானம் | : | Rs.2 Lakh per month |
| சொத்து மதிப்பு | : | Rich & Affluent - Lands, Plots, Residential Flats in Salem & Bangalore. Properties Value - Over call |
| உகந்த மணமகன் | : | Good Family, Equal Status |
| ஜாதக குறிப்பு | : | சுத்த ஜாதகம் |
| தொடர்புக்கு | : | 93538 98910, 93419 00890 |

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) | கேது | மாந் | சூரி<br>புத<br>சுக் |
| | இராசி | | |
| லக்<br>சந் | | | |
| | குரு(வ) | ராகு | செவ் |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சூரி<br>கேது |
| | நவாம்சம் | | சனி(வ) |
| செவ்<br>புத | | | லக் |
| ராகு | | குரு(வ) | சந் |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 109 | ரித்திகா | பண்ணை | 19-08-1995 ரோகிணி | B.E., (EEE) | PGDM, Finance | நாமக்கல் 02.00 pm | 98480 18460 93481 55721 |
| 110 | S.மஞ்சுபார்கவி | கண்ணன் | 12-07-1994 மகம் | B.E., (CSE) | Software Engineer | ஈரோடு 08.50 am | 94438 95343 63812 02223 |
| 111 | R.நிமித்தா | மணியன் | 18-05-2000 அனுஷம் | M.Tech., | Admin Manager | சேலம் 03.50 pm | 94440 36922 94450 57545 |
| 112 | S.பூஜா ராகவி | பண்ணை | 20-02-1997 பூசம் | B.E., (MBA) | Studying | சேலம் 06.25 pm | 94422 11292 |
| 113 | Dr.S.பவதாரணி | அந்துவன் | 17-05-1997 உத்திரம் | MBBS., DNB (RI) | Apollo Hospital | கரூர் 06.25 am | 97919 04599 99448 79595 |
| 114 | P.கோசிலா | பொருள்தந்த | 10-12-1995 புணர்பூசம் | B.E., | Software Engineer (NOVAC Technology Solutions) | சேலம் 01.45 pm | 75985 74919 94865 33919 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 100 | K.R.குணா | கண்ணன் | 28-11-1995 அவிட்டம் | MBBS., (MD) Plumonary | Studying PG | ஈரோடு 10.35 pm | 94437 33223 94425 21234 |
| 101 | M.A.ரெவநாத் | மணியன் | 08-08-1995 பூராடம் | B.E., (Mech.) | Garments Textiles (Tiruppur) | ஈரோடு 09.20 pm | 94425 13710 |
| 102 | R.கௌசிக் | ஆந்தை | 11-08-1995 அவிட்டம் | B.E., MS, MS (USA) | Sodecia (USA) | சென்னை 07.40 am | 94443 06091 96770 02244 |

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 103 | C.லோகநாதன் | கூரை | 23-06-1995<br>பரணி | B.E., (Mech) | SBCID, Police<br>Chennai | ஈரோடு<br>09.30 am | 98657 35549 |
| 104 | S.தரணிதரன் | செம்மன் | 16-06-1997<br>சுவாதி | D.S.C.E., | Sr. HR | கோவை<br>04.05 pm | 96880 06249 |
| 105 | C.ஆகாஷ்சந்திரன் | தனஞ்செயன் | 13-02-1995<br>பூசம் | MD (DM) | Doctor | சென்னை<br>12.05 pm | 98405 88598<br>94873 23441 |
| 106 | கு.செல்வகுமார் | மணியன் | 19-11-1997<br>புனர்பூசம் | B.Com., A & F<br>(PGDM) | Sr. Analyst<br>Chennai | சென்னை<br>06.03 am | 94431 74530 |
| 107 | ராகுல்ராஜா | கூரை | 05-04-1997<br>சதயம் | B.Tech., IT | IT (LTI Mindtree) | சென்னை<br>12.15 am | 99624 69769<br>98652 31817<br>99653 80789 |

**சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் துணைத்தலைவர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களுக்கு ''கொங்கு பொன்மனச் செம்மல்'' விருதும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.கே.கே.ரமேஷ் அவர்களுக்க ''கொங்கு பெருந்தகை'' விருதும் மலேசியா கொங்கு வழங்கி கௌரவித்தது.**












மலேசிய கொங்கு நலனபிரிவிருத்தி மன்றம் சார்பில் ஆகஸ்ட் 10 ஆம் நாள் நடைபெற்ற குடும்ப விழாவில்
நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர், பொருளாளர்,
முன்னாள் செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**REGD. NEWS PAPER /** **Posted on : 21-08-2024**

Posted at EGMORE RMS/1 (Pattrika Channel) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper : TNTAM/2016/69320 | Postal Reg. No. TN/CH(C)/602/2022-2024
WPP No : TN/PMG(CCR)/WPP-687/2022-2024 / Date of Publication Second Week of every month

## ஜெம் மருத்துவமனை டாக்டர் சி.பழனிவேலு அவர்களின் பேத்தி செல்வி பி.எஸ்.சாரல் அவர்களின் பரநாட்டிய அரங்கேற்ற விழாவில் சங்கத்தின் தலைவர் பங்கேற்பு



ஸ்ரீ முத்த வெங்கடசுப்பா ராவ் ஹாலில் , 3 ஆகஸ்ட் 2024, சனிக்கிழமை அன்று மாலை 5:30 மணிக்கு நடைபெற்ற டாக்டர் எஸ்.கே. பழனிச்சாமி, ஸ்ரீமதி. பி ஜெயா, டாக்டர் சி. பழனிவேலு மற்றும் ஸ்ரீமதி. பி சௌந்தரம், ஸ்ரீமதி. சங்கீத பிரியா மற்றும் டாக்டர் பி செந்தில்நாதன் & சிதம்பரம் அகாடமி ஆஃப் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் பரதநாட்டிய அரங்கேற்ற விழாவில் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர் திரு.கே.கே.ரமேஷ் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.சாரல் அவர்களின் தமிழ்கலாச்சார பாரநாட்டிய விழாவில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். மேலும் பி.எஸ்.சாரல் அவர்களுக்கு நமது சங்கத்தின் தலைவர் திரு.கே.கே.ரமேஷ் அவர்கள் பொன்னாடை அணிவித்து அகமகிழ்வோடு வாழ்த்துகளை தெரிவித்தார்.



அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை – 600 014.

பெறுநர்